## இலங்கை சனநாயக, சோசலிச குடியரசு
### உள்ளக மற்றும் உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## (தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்)

**திகதி** : 15 ஆகஸ்ட் 2019

**விலைமனு இல** : **LGESP(AF)-MPCLG-15**

**கடன் இலக்கம் மற்றும் தலைப்பு** : **L3431,** புறநெகும - உள்ளூராட்சித் துறையை மேம்படுத்தும் செயற்றிட்டம் (மேலதிக நிதியிடல்)

**ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு** : **NWP-AF-WS-CKD-15,** கருவலகஸ்வெவ பிரதேச சபையின் நீர் வழங்கல் திட்ட நிர்மாண வேலைகள்

**விலைக்கோரல்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள்** : 12 செப்டெம்பர் 2019 பி.ப. 2.30 மணி (உள்ளூர் நேரம்)

1. உள்ளூராட்சித் துறையை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் (மேலதிக நிதியிடல்) (LGESP-AF) கிரயச் செலவிற்காக இலங்கை சனநாயக, சோசலிச குடியரசு அரசாங்கமானது ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் (ADB) கடனொன்றிற்கான ஒப்புதலை பெற்றுள்ளது. இக்கடனின் ஒரு பகுதியானது மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தக் கொடுப்பனவிற்காக பயன்படுத்தப்படும்.
2. மேற்குறிப்பிடப்பட்ட வேலைகளுக்காக தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து வடமேல் மாகாண தலைமைச் செயலாளரின் சார்பில் இலங்கை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் (தலைவர், அமைச்சு பெறுகைக் குழு) முத்திரைக் குறிபொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
3. ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒரு கடித உறையுடன் ஒற்றைக் கட்டச் செயல்முறைக்கமைய (NCB/1S1E) தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறைப்படுத்தப்படும். விலைக்கோரல் ஆவணங்களில் விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் தகுதியுள்ள சகல நாடுகளின் விலைமனுதாரர்களும் இதில் பங்குபற்றலாம்.
4. பின்வரும் முக்கிய தகுதித் தேவைப்பாடுகளைக் கொண்ட விலைமனுதாரர்கள் மட்டும் இந்த விலைக்கோரலில் பங்குபற்றலாம்.

(அ) உள்நாட்டு விலைமனுதாரர்கள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புத் துறையில் CIDA (முன்னைய ICTAD) C 2 தரப் பதிவுபெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் 4(இ)யில் தரப்பட்டுள்ளதகைமைகள் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

i. உள்நாட்டு கேள்விதாரர்களுக்கு இடையில் இணைந்து செயற்படுவதாயின் மட்டும், தலைமை பங்குதாரர் CIDA (முன்னைய ICTAD) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) வெளிநாட்டு விலைமனுதாரர்கள் கீழே 4(இ)யில் தரப்பட்டுள்ள தகைமைப் பிரமாணங்களை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

i. உள்நாட்டு கேள்விதாரர்கள் மற்றும் வெளிநாட்டு கேள்விதாரர்கள் இடையே இணைந்து செயற்படுவதாயின் வெளிநாட்டு கேள்விதாரர்களினால் கீழே 4இல் தரப்பட்டுள்ள தகைமைப் பிரமாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் உள்நாட்டு கேள்விதாரர் கட்டாயமாக குறிப்பிடப்பட்டுள்ள CIDA (முன்னைய ICTAD) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) விலைமனுதாரர்களுக்கான தகைமைகள்

| தொ. இல. | பொதியின் பெயர் / தேர்வு முறை/ நிறைவேற்றல் காலப்பகுதி: | நிதியிடல் நிலைமை : கடந்த ஆண்டு விலைமனுதாரரின் நிகரப் பெறுமதியானது மொத்தச் சொத்துக்களுக்கும் மற்றும் மொத்தக் கடன் பொறுப்புக்களுக் கிடையிலான கணக்கீடு செய்யப்பட்ட வித்தியாசமாக இருத்தல். (கடந்த 3 வருடங்களுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கவும்) | ஆகக்குறைந்த வருடாந்த சராசரி தேறிய நிர்மாண புரள்வு : நடைபெற்றுக் கொண்டிருக்கும் அல்லது கடந்த 3 வருடங்களில் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட மொத்தக் கொடுப்பனவுகளாகக் கணக்கீடு செய்யப்பட்டிருத்தல். | நிதியிடல் வளங்கள்: நிதியிடல் வளங்களைக் கொண்டிருத்தல் | நிர்மாணத்துறை அனுபவம்: கடந்த 8 வருடங்களில் திருப்திகரமாக அல்லது போதுமான அளவில் பங்குபற்றிய/ நிறைவேற்றப்பட்ட ஆகக் குறைந்தது 02 ஒப்பந்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | கருவலகஸ்வெவ பிரதேச சபையின் நீர் வழங்கல் திட்ட நிர்மாண வேலைகள்<br>பொதி இலக்கம் :- **NWP-AF-WS-CKD-15**<br>நிறைவேற்றல் காலப்பகுதி:<br>454 நாட்கள் | தேறிய புரள்வு சாதகமாக இருத்தல் | கடந்த 03 வருடங்களில் ஆகக் குறைந்த வருடாந்த சராசரி நிதிப் புரள்வானது இலங்கைப் பணத்தில் 500 மில்லியன் ரூபாவாக இருத்தல் | விலைமனுக் கோரல் ஆவணத்தில் தேவைப்படுத்தப் பட்டுள்ளவாறு. | ஆகக் குறைந்தது இதனையொத்த 2 உத்தேச வேலையையாவது விலைமனுதாரர் நிறைவு செய்திருத்தல் வேண்டும். நிகராக விலைமனுதாரரின் வைப்பு இலங்கைப் பணத்தில் 280 மில்லியன் ரூபாவை விஞ்சியிருத்தல் வேண்டும். (வெட் வரிக்கு முன்) |

© THE ASSOCIATED NEWSPAPERS OF CEYLON LTD. ALL RIGHTS RESERVED

**குறிப்பு:** ஒப்பந்ததாரர்கள் இதற்கு முன் இணை நிறுவனங்களாக செயற்பட்டிருந்தால், விலைமனு ஆவணத்தில் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு விலைக்கோரல் பங்கு பற்றும் ஒரு தரப்பினராக விலைமனுதாரர் கவனத்திற் கொள்ளப்படுவர்.

5. மேலதிக தகவலைப் பெறுவதற்கும் விலைமனுக் கோரல் ஆவணங்களை பரீட்சிப்பதற்கும் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**செயற்றிட்ட முகாமைத்துவ அலகு,**
**புறநெகும - உள்ளூராட்சித் துறையை மேம்படுத்தும் செயற்றிட்டம் - மேலதிக நிதியிடல் (LGESP – AF)**
**191 ஏ, 2ஆம் மாடி, ஜே ஆர் ஜயவர்தன நிலையம்,**
**தர்மபால மாவத்தை,**
**கொழும்பு-07.**
**தொலைபேசி: +94 11 2691 202. தொலைநகல் : +94 11 2676678**
**மின்னஞ்சல் : pdlgesp@gmail.com**

6. ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்வதற்காக, தகுதியுள்ள மற்றும் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பின்வருவனவற்றை நிறைவேற்றல் வேண்டும்.
   - பொதியின் பெயரைத் தெளிவாக குறிப்பிட்டு விலைமனுக்கோரல் ஆவணங்களை வழங்குமாறு மேற்படி முகவரிக்கு எழுத்து மூலமாக விண்ணப்பித்தல்.
   - இலங்கைப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணமாக 35,000.00 ரூபாவை (முப்பத்தையாயிரம் ரூபா) ரொக்கப் பணத்தில் புறநெகும - (உள்ளூராட்சித் துறையைமேம்படுத்தும் செயற்றிட்டம்), செயற்றிட்ட முகாமைத்துவ அலகு (LGESP – AF), செயற்றிட்ட பணிப்பாளரிடம் மேலே 5 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரியில் செலுத்தல் வேண்டும்.
   - 15 ஆகஸ்ட் 2019ஆம் திகதி முதல் 11 செப்டெம்பர் 2019ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.
7. 29 ஆகஸ்ட் 2019ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு மேற்படி 8ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் விலைமனு முன்னோடிக் கூட்டத்தில் தமது சொந்த செலவில் பங்குபற்றலாம்.
8. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பூர்த்திசெய்யப்பட்ட பொதிக்கான விலைமனுக்களை பின்வரும் அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

செயலாளர் - தலைவர் - அமைச்சுப் பெறுகைக் குழு,
உள்ளக மற்றும் உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு,
இல. 330,யூனியன் பிளேஸ், கொழும்பு-02, இலங்கை.

செயற்றிட்ட பணிப்பாளர் அவர்களின் கவனத்திற்கு
புறநெகும - உள்ளூராட்சித் துறையை மேம்படுத்தும் செயற்றிட்டம், (மேலதிக நிதியிடல்)
செயற்றிட்ட முகாமைத்துவ அலகு.

- இறுதித் தினமான 12 செப்டெம்பர் 2019ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக
- விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ள விலைமனுப் பிணை முறியுடன்
- ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' ஆகியவற்றை அடக்கியுள்ள உறைகளின் இடது பக்கமேல் மூலையில் விலைமனு பொதி இலக்கம் குறிப்பிடப்படல் வேண்டும்.
- மேலே குறிப்பிட்டுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் இறுதிவேளையின் பின்னர் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும்.

9. தள விஜயங்களுக்கான செலவுகள் மற்றும் விலைமனுக்களின் தயாரிப்பு அல்லது ஒப்படைப்பு தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு ஆகுசெலவுகள் அல்லது செலவினங்களுக்கு ஒப்பந்த வழங்குநர் பொறுப்பேற்கமாட்டார்.
10. விலைமனு அழைப்பு அடங்கலான விலைமனுக் கோரல் ஆவணங்கள், http://puraneguma.lk/additional-financing/project-tender-notice.php என்ற செயற்றிட்ட இணையதளத்தில் பார்வைக்காக மாத்திரம் காட்சிப்படுத்தப்படும். செயற்றிட்ட முகாமைத்துவ அலகிலிருந்து தேவைப்படுத்தப்பட்டுள்ள கட்டணத்தைச் செலுத்திய பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட விலைமனுக் கோரல் ஆவணங்கள் மாத்திரமே மதிப்பீட்டிற்காக பரிசீலனை செய்யப்படும்.

**எச். எம். காமினி செனவிரத்ன,**
**செயலாளர் - தலைவர், அமைச்சு பெறுகைக் குழு,**
**உள்ளக மற்றும் உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு,**
**330,யூனியன் இடம்,**
**கொழும்பு-2.**